# நெடுந்தீவு பிரதேச சபை

## யாழ்ப்பாண மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களின் சமர்ப்பிப்பு

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மே 25 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 ஏப்ரல் 05 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 மே 14 இல் சபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய நெடுந்தீவு பிரதேச சபையானது 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் தலைவரிற்கு சமர்ப்பிக்கப்பட்ட என்னுடைய அறிக்கையுடன் தொடர்புபட்ட விடயங்களினால் நிதிக் கூற்றுக்களின் தாக்கங்களைத்தவிர பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு அமைய நெடுந்தீவு பிரதேச சபையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டின் நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிக் கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் செலவினம் தொடர்பில் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன.

| நிதிக் கூற்றுக்கள் மீதான தாக்கம் | சொத்துக்கள் | | பொறுப்புக்கள் | | செலவினம் | |
|---|---|---|---|---|---|---|
| | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா |
| அதிகரித்துக் கூறல்கள் | 01 | 28,999 | - | - | 01 | 5,413,846 |
| விடுபாடுகள் | - | - | 01 | 648,164 | - | - |
| வகைப்படுத்தல் தவறுகள் | - | - | - | - | 01 | 11,050 |

(ஆ) சபையானது 2009 இற்கு முன்னர் அரச சார்பற்ற அமைப்புகளிடமிருந்து பெறப்பட்டிருந்த உழவு இயந்திரற்கள், தண்ணீர் தாங்கிகள், வாகனங்கள் மற்றும் பிக்கப் என்பன பெறுமதியிடப்படடு கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2. இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

கட்டுப்பாட்டுக் கணக்குகளின்படி, 02 கட்டுப்பாட்டு கணக்குகளின் மீதி ரூபா 1,671,400 ஆக இருந்தது. அதேநேரம் உப பதிவேடுகளின்படி கணக்குகளின் மொத்த மீதி ரூபா 1,563,623 ஆகும்.

### 1.3.3 கணககாய்விற்கான சான்றுகளின்மை

கணக்காய்விற்கு தகவல்கள் சமர்ப்பிக்காமை

ரூபா 5,756,279 மொத்தமான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக வேண்டப்பட்ட தகவல்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்காமையால் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியவில்லை.

### 1.3.4 இணங்காமைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கான தொடர்பு** | **இணங்காமைகள்** |
|---|---|
| (அ) 1989 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதிகள் | |
| (i) அத்தியாயம் I பிரிவு 5(xii) | காசு மற்றும் களஞ்சியங்களை கையாளும் உத்தியோகத்தர்களிடமிருந்து போதிய பிணை வைப்பு பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ii) அத்தியாயம் V பிரிவு 140 | உரிய திகதியில் ரூபா 306,715 தொகையான முற்பணங்களை தீர்க்கத் தவறியமையை செயலாளர் ஊடாக தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) நிதிப்பிரமாணங்கள் | |
| நி.பி 1646 | 08 வாகனங்களின் சம்பவ குறிப்பு புத்தகம் மற்றும் நாளாந்த ஓட்ட அட்டவணை என்பன கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்திற்கு மேலான வருமான மிகை ரூபா 363,675 ஆகும் நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டெழும் செலவினத்திற்கு மேலான வருமான மிகை ரூபா 1,069,922 ஆகும்.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

பின்வரும் நிதிக்கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) நீர் வழங்கல் மீள்நிர்மாணத்திற்காக 1999 இல் தலைவருக்கு செலுத்தப்பட்ட ரூபா 100,000 தொகையான முற்பணத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பொருட்களை கொள்வனவு செய்வதற்காக 2000 ஆம் ஆண்டில் தலைவருக்கு செலுத்தப்பட்ட ரூபா 56,215 தொகையான முற்பணத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பதவி வறிதாக்கப்பட்ட 05 உத்தியோகத்தர்களிடமிருந்து 05 ஆண்டுகளிற்கு மேலாக ரூபா 17,845 தொகையான உத்தியோகத்தர் கடன்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமான விடயம் | 2011<br>மதிப்பிடப் பட்டது | 2011<br>உள்ளபடி யானது | 2011<br>திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| இறைகளும் வரிகளும் | 138 | 85 | 250 |
| குத்தகை வாடகைகள் | 172 | 148 | - |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 49 | 19 | - |
| வேறு வருமானங்கள் | 18,044 | 6,876 | 48 |
| மொத்தம் | 18,403 | 7,128 | 298 |

### 2.3.2. நீதி மன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

2011 ஆம் ஆண்டின் போது நீதி மன்றத் தண்டப்பணங்கள் பிரதம செயலாளரிடமிருந்தும் பிரதம பதிவாளர் நாயகத்திடமிருந்தும் தொகைள் மதிப்பிட்பபட்டு கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3. சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) சபையில் 03 கணனிகள் மற்றும் 03 அச்சீட்டு கருவி இருந்த போதிலும் நூலக புத்தக பதிவேட்டினை கணனிமயப்படுத்துவதற்கு ரூபா 2,250 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) அவசர மற்றும் முழுமையான சாதாரண கடமைகளிற்கு புறம்பாகவுள்ள மற்றும் அலுவல நேரத்தில் பூர்த்தியாக்க முடியாதுள்ள குறிப்பிட்ட வேலைகளிற்காக மாத்திரம் மேலதிக நேரக் கொடுப்பனவு செலுத்த முடியும். இந்த வெண்டுகைக்கு முரணாக சபையானது ரூபா 3,642 தொகையான மேலதிக நேரக் கொடுப்பனவு செலுத்தியிருந்தது.

**2.3.4. முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

-----------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 செப்தெம்பர் 30 ஆந் திகதிய உள்ளூராட்சி ஆணையாளரின் கடிதத்திற்கு முரணாக முறையான பதில் கடமை நியமனக் கடிதம் இல்லாமல் 2011 ஆம் ஆண்டிற்காக சபையின் செயலாளருக்கு ரூபா 40,136 தொகையான தலைவர் படி செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) பிரதேச சபையின் முதலாவது கூட்டம் பிற்போட்டமைக்கான விளப்பரக் கட்டணமாக ரூபா 2,160 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) சபைக்கு சொந்தமான வீதிகளின் அளவீட்டிற்காக 06 ஊழியர்களிற்கு ரூபா 12,000 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) குறிகட்டுவான் முதல் நெடுந்தீவு வரை சபையின் உத்தியோகத்தர்கள் பிரயாணம் செய்தல் தொடர்பான படகுக் கட்டணமாக ரூபா 15,000 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(உ) சபையின் தொடக்க விழாவிற்காக ரூபா 76,955 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**2.4 ஒப்பந்த நிர்வாகம்**

**செயற்திட்டம் பூர்த்தியாகலில் தாமதம்**

நிதியாண்டின் போது 10 செயற்திட்டங்கள் அமுலாக்குவதில் தாமதங்கள் இருந்ததுடன் அந்த வேலைகளிற்காக ரூபா 26,734,122 தொகையான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது.

**2.5 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

2009 சனவரி 28 ஆந் திகதிய பிரீ/01/2009 ஆம் இலக்க வடக்கு மாகாண திறைசேரி சுற்றறிக்கைக்கு முரணாக 2010 ஆம் ஆண்டிற்காக கைதவிர்புக்குழு உறுப்பினர் சபைக்கு ரூபா 1,250 தொகையான கைதவிர்புக்குழு உறுப்பினர் சபை படி செலுத்தப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது.

**2.6. செயலாற்றல்**

சபையால் நிதியாண்டின் தொடக்கத்தில் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் எதிபார்க்கப்பட்ட குறிக்கோள்கள் மற்றும் அவற்றின் மீதான முன்னேற்றம் என்பவற்றினை மதிப்பிட முடியாதிருந்தது.

**2.7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

அ. கணக்கீடு
ஆ. வருமான சேகரிப்பு
இ. நிலையான சொத்துக்கள்
ஈ. மானியங்கள் மற்றும் நன்கொடைகள்
உ. வாகனங்கப் பாவனை
ஊ. நானாவித வைப்புக்கள்
எ. மாதாந்த கூட்டக் குறிப்புகள்
ஏ. மனித வளங்கள்
ஐ. பாதீட்டுக் கட்டுப்பாடு